தினமணி

**பாக் ஜலசந்தி கடலில் அதிக வெப்பம்: இறால் இனப் பெருக்கத்தில் பாதிப்பு**

வ. ஜோதிராமலிங்கம்

First Published : 18 May 2010 09:23:19 AM IST

ராமேசுவரம், மே 17: பருவ நிலை மாற்றத்தால் பாக் ஜலசந்தி கடலில் ஏற்பட்டுள்ள அதிக வெப்பத்தால், இறால் மீன் இனப் பெருக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

ராமேசுவரம் தீவு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படைத் தாக்குதல், மற்றொரு பக்கம் இயற்கை மாற்றத்தால் தொழில் நஷ்டத் தாக்குதல். இந்த இரண்டையும் மீறி மீனவர்கள் தினசரி வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இம் மீனவர்கள் விலை உயர்ந்த இறால் மீனைப் பிடிப்பதையே முக்கியத் தொழிலாக வைத்துள்ளனர்.

இறால், கணவாய், நண்டு உள்ளிட்ட சில மீன்கள் உற்பத்திக்காக ஏப்ரல் 15-ம் தேதி முதல் மே 30-ம் தேதி வரை விசைப்படகுகள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என தமிழக அரசு உத்தரவிட்டது.

இந்த குறிப்பிட்ட 45 நாள்களில் கடலில் கோடை மழை பெய்தும், சூறாவளிக் காற்று வீசினால் கடலில் உள்ள வெப்பம் குறைந்து குளிர்ந்த சூழலில் மேற்குறிப்பிட்ட மீன்கள் இனப்பெருக்கத்துக்கு ஏதுவாக இருக்கும் என கடல்சார் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஆனால், தற்போது ராமேசுவரம் தீவுப் பகுதியில் காற்று, மழை இல்லாததால் சுட்டெரிக்கும் வெயிலில் பொதுமக்கள் நடமாட முடியாமல் பரிதவிக்கின்றனர்.

இந்த கடும் வெப்பம் பாக் ஜலசந்தி கடலையும் தாக்கியுள்ளதாக மீனவர்கள் கருதுகின்றனர்.

இதுகுறித்து ராமேசுவரம் தீவு சிங்கார மீனவர் சங்கத் தலைவர் யூ. அருளானந்தம் திங்கள்கிழமை கூறியதாவது:

உலகில் ஆண்டுதோறும் அதிக நீரோட்டம் கொண்டது பாக் ஜல சந்தி கடலாகும். இக் கடல் பகுதியில் எப்போதும் குளிர்ந்த காற்று வீசி வருவதால், மீன்களின் புகலிடமாகக் கருதப்படுகிறது.

அதனால்தான் பல நூற்றாண்டுகளாக இக் கடலில் மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்து வருகின்றனர்.

மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்ட 45 நாள்களில் மீனவர்கள் கடன் வாங்கி பல லட்சம் ரூபாய் செலவில் படகுகளின் பழுதுகளை நீக்கி விட்டு, மே 30-க்குப் பிறகு பாக் ஜலசந்தி கடலில் அதிகமான இறால் மீன்களைப் பிடிக்க மகிழ்ச்சியுடன் செல்வர். ஆனால், இந்தாண்டில் கடலில் நிலவும் வெப்பத்தால் குளிர்ந்த சூழ்நிலை இல்லை.

இதனால் இறால் மீன் இனப் பெருக்கத்தில் பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது.

மேலும், தற்போது கரை வலையில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு எதிர்பார்த்த அளவு அதிகமான மீன்கள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். இந் நிலையில், விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க இன்னும் 13 நாள்கள் உள்ளதால், எதிர்பார்க்கும் அளவுக்கு இறால் மீன்கள் கிடைக்க இயற்கைதான் வழிகாட்ட வேண்டும் என வேதனையுடன் தெரிவித்தார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 73.60அடி**

First Published : 17 May 2010 11:07:36 AM IST

சேலம், மே 16: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 73.60 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 2,481 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 988 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின்

**கால்நடை தீவனங்கள் விலை உயர்வால் பால் உற்பத்தியாளர்கள் தவிப்பு**

கு. வைத்திலிங்கம்

First Published : 18 May 2010 01:58:27 AM IST

Last Updated : 18 May 2010 06:03:14 AM IST



திருச்சி, : கடந்த 8 மாதங்களில் பால் உற்பத்திக்குத் தேவையான கால்நடை தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இருப்பினும் கொள்முதல் விலை உயர்த்தப்படாததால் பால் உற்பத்தியாளர்கள் பரிதவித்து வருகின்றனர்.

தமிழகத்தில் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான அளவு பாலை ஆவின் நிறுவனமும், தனியார் பால் உற்பத்தி நிறுவனங்களும் கொள்முதல் செய்து வருகின்றன.

இதுவரை ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்கி வந்த பால் உற்பத்தியாளர்கள், கால்நடை தீவனங்களின் விலை உயர்வு, உயர்த்தப்படாத கொள்முதல் விலை போன்ற காரணங்களால் தனியாருக்கு பாலை வழங்குவதற்குத் தயாராகி வருகின்றனர்.

ஆவின் நிறுவனத்துக்கு வழங்கப்படும் பாலில் 4.5 சத கொழுப்பு சத்தும், 8.5 சத இதர சத்துகளும் கொண்ட பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 15.88 -ம், 7.5 சத கொழுப்பு சத்தும், 8.5 சத இதர சத்துகளும் கொண்ட எருமைப் பால் லிட்டருக்கு ரூ. 24.28-ம் கொள்முதல் விலையாக பால் உற்பத்தியாளர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், கடந்த 8 மாதங்களுக்கு மேலாக கால்நடை தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்து வருவதால், தங்களுக்கு வழங்கப்படும் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று அரசுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விலை உயர்வால் பாதிப்பு: 2009, செப்டம்பர் மாதம் பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டது. ஆனால், அதன் பின்னர் வைக்கோல், புண்ணாக்கு போன்ற கால்நடை தீவனங்களின் விலை தாறுமாறாக உயரத் தொடங்கியிருக்கிறது என்கின்றனர் பால் உற்பத்தியாளர்கள்.

ரூ. 100-க்கு விற்பனை செய்யப்பட்ட வைக்கோல் தற்போது ரூ. 200 ஆகவும், சோளக் கட்டு ரூ. 150-லிருந்து ரூ. 300 ஆகவும் உயர்ந்துள்ளது.

இதுபோல ஒரு கிலோ தவிடு ரூ. 5.50- லிருந்து ரூ. 8 ஆகவும், கடலைப் புண்ணாக்கு ஒரு கிலோ ரூ. 27-லிருந்து ரூ. 32 ஆகவும், கலப்புத் தீவனங்கள் கிலோ ரூ. 10-லிருந்து ரூ. 12.50 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்ததால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து வருகின்றனர் பால் உற்பத்தியாளர்கள்.

பால் கொள்முதல் விலையை உயர்த்தாமல் இதே நிலை தொடர்ந்தால் இருக்கிற மாடுகளை விற்பனை செய்துவிட்டு வேறு வேலைக்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று தெரிவிக்கின்றனர் பால் உற்பத்தியாளர்கள்.
கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்: தமிழகத்தின் அண்டை மாநிலங்களில் பால் விலையை உயர்த்தாமல் பால் கொள்முதல் விலையை மட்டும் அந்தந்த மாநில அரசுகள் உயர்த்தி உள்ளன.
பால் விற்பனை விலையை உயர்த்தாமல் கொள்முதல் விலை புதுச்சேரியில் லிட்டருக்கு ரூ. 2.50 வரையிலும், கேரளத்தில் ரூ. 3 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது.
கர்நாடக மாநிலத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி நிலையங்கள் தங்களுக்கு பால் வழங்கி வரும் பால் உற்பத்தியாளர்களுக்கு இரண்டு முறை ஊக்கத் தொகையையும் வழங்கியுள்ளது.
எனவே, மற்ற மாநிலங்களைப் போல தமிழகத்திலும் பால் விலையை உயர்த்தாமல் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்கிறார் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் மாநில இணைச் செயலர் என். கணேசன்.
பால் கொள்முதலும் குறைகிறது?: தினமும் 2.80 லட்சம் லிட்டர் முதல் 2.90 லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்து வந்த ஆவின் நிறுவனத்துக்கு, 50,000 லிட்டர் வரை பால் கொள்முதல் குறைந்துள்ளதாக பால் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
இதற்கு கொள்முதல் விலை உயராமல் கால்நடை தீவனங்களின் விலை உயர்ந்தது, தற்போது நிலவிவரும் கடுமையான வெப்பத்தால் மாடுகள் பால் சுரக்கும் அளவு குறைந்து வருவது போன்றவை காரணங்களாக உள்ளன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
தனியாருக்கு மாறும் நிலையில் பால் உற்பத்தியாளர்கள்: அரசு வழங்கி வரும் கொள்முதல் விலையைக் காட்டிலும் தனியார் பால் நிறுவனங்கள் லிட்டருக்கு ரூ. 18 வரை விலை நிர்ணயித்து வழங்கி வருவதால் பல இடங்களில், ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்குவதை நிறுத்திக் கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் முடிவில் கிராமப்புறங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.
அரசு பால் விலையை உயர்த்தி வழங்கும். அவசரப்பட வேண்டாம். நல்ல முடிவு வரும் வரை காத்திருக்கலாம் என்ற கருத்தை, தனியாருக்கு பால் வழங்கும் நிலையில் உள்ள உற்பத்தியாள்ரகளிடம் எடுத்துரைத்து வருகிறது பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.
தனியார் பால் நிறுவனங்கள் லிட்டருக்கு ரூ. 18 வரை பால் கொள்முதல் செய்வதற்கு உத்தரவிடும் அரசு, ஏன் அந்த விலையை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கக் கூடாது என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
பால் நிறுத்தும் போராட்டம்: பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் எனக் கோரி, திங்கள்கிழமை முதல் (மே 17) பால் உற்பத்தியை நிறுத்தும் போராட்டத்தை மேற்கொள்ளவும் பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் முடிவு செய்துள்ளன.
இதனால், பால் தட்டுப்பாடு ஏற்படு ம் சூழல் நிலவுகிறது. எனவே, அரசு உடனடியாக பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தமிழகம், புதுவையில் மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 18 May 2010 01:31:50 AM IST

Last Updated : 18 May 2010 06:03:36 AM IST



சென்னை, மே 17: வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம், புதுவையில் செவ்வாய்க்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியது:

வங்கக் கடலில் சென்னையிலிருந்து 850 கி.மீ. தொலைவில் தென்கிழக்குப் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி, புயலாக உருவெடுத்துள்ளது. இந்தப் புயல் வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து, ஆந்திர மாநில கடல் பகுதியில் மையம் கொண்டுள்ளது. இதனால் ஆந்திரத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதன் பாதிப்பு தமிழகத்திலும் இருக்கும். பலத்த காற்று வீச வாய்ப்பு உள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கும் வாய்ப்பு உள்ளது. சென்னையிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றார்.

இந்தத் தொலைதூர புயல் சின்னம் காரணமாக, பாம்பன் துறைமுகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு திங்கள்கிழமை ஏற்றப்பட்டது. மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

**ஆந்திரத்தில் உஷார் நிலை:** புயல் சின்னம் காரணமாக, ஆந்திரத்தின் 9 கடலோர மாவட்டங்களிலும் உஷார் நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட நிர்வாகங்களை, ஆந்திர அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

தினமலர்

**கொப்பரை ஏலம் கிலோ ரூ.30.50**

பொள்ளாச்சி: ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 30.50 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 26 பேர் 71 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை மூன்று வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பா ளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 57 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 29.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 30.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 14 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 22.05 ரூபாய் முதல் அதிகபட்சமாக 26.05 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் விலை கிலோவுக்கு 1.10 ரூபாய் குறைந்துள்ளது. முதல் தர கொப்பரைக்கு வெளிமார்க்கெட்டில் 34 ரூபாய் வரையிலும் விலை கிடைக்கிறது. முதல் தர கொப்பரையை விவசாயிகள் அரசு கொப்பரை கொள்முதலுக்காக இருப்பு வைத்துள்ளதால் ஈரப்பதமுள்ள 2ம் தர கொப்பரை அதிகம் வந்தது. அதை தரம் பிரித்து ஏலம் விட்டதால் விலை குறைந்துள்ளது' என்றனர்.

**'இ-வேளாண்மை' திட்டம் ரூ.1.5 கோடியில் விரிவாக்கம்: வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்**

கோவை: "புதிதாக துவங்கப்பட்டுள்ள 'இ-வேளாண்மை' திட்டத்தில் அதிக விவசாயிகள் உறுப்பினராக சேர்ந்து வருவதால், 2010-2011ல் 1.5 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை 23 விவசாய பகுதிகளில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது," என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

'இ-வேளாண்மை'எனும் நவீன திட்டத்தின் பயிற்சி துவக்க விழா, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. வேளாண் வளர்ச்சிக்கு உதவும் ஆராய்ச்சிகள், திட்டங்களை தினமும் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் அறிமுகம் செய்து

வருகின்றனர். வேளாண் அலுவலர்கள் வாயிலாக இத்தகவல்களை ஒவ்வொரு தனி விவசாயியையும் சென்றடையச் செய்வது பெரும் சவால் ஆக உள்ளது. நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் தகவல்களை சென்றடையச் செய்யும் 'எலக் டிரானிக் வேளாண்மை'(இ-வேளாண்மை) எனும் புதிய திட்டத்தை நாட்டில் முதல் முறையாக கோவை வேளாண் பல்கலை அறிமுகம் செய்துள்து.  டிஜிட்டல் கேமரா, கம்ப்யூட்டர், இன்டெர்நெட், மொபைல் போன் உள்ளிட்ட நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம், வேளாண் தகவல்களை விவசாயிக்கு அனுப்புவதுதான் இப்புதிய திட்டம்.

இதற்கென நியமிக்கப்பட்டுள்ள கள ஒருங்கிணைப்பாளர்கள் மூலம், விவசாயிகளின் தேவையின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்படும். இத்திட்டத்தில் சேர, விவசாயிகள் தங்கள் நிலப்பரப்பின் அடிப்படையில் 50 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை உறுப்பினர் கட்டணம் செலுத்த வேண்டும். உறுப்பினராகும் விவசாயி, விவசாயம் சார்ந்த சந்தேகங்களை கள ஒருங்கிணைப்பாளரிடம் மொபைல் போனில் கேட்டு விளக்கம் பெறலாம். குழப்பமான, பெரிய பிரச்னைகளுக்கு அந்தந்த துறை சார்ந்த நிபுணர்கள் நேரில் சென்று தீர்வு வழங்குவர். நோய், பூச்சி மருந்து, காலநிலை உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்ட பயிர்களின் புகைப்படங்களை மொபைல் போன் காமிராவில் புகைப்படம் பிடித்து, கள ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் இன்டெர்நெட் மூலமும் அனுப்பி தீர்வு காணலாம். தினமும் பகல் 1.00 மணிக்குள் இப் புகைப்படங்கள் டவுன்லோடு செய்யப்பட்டு, அதற்கேற்ப, விவசாயியின் மொபைல் போன் அல்லது இ-மெயில் வாயிலாக அறிவுரை வழங்கப்படுகிறது. இதன் மூலம் பயிர், விளைபொருள் சார்ந்த தங்கள் பிரச்னைக்கான தீர்வு விவசாயிகளின் வீட்டு வாசலுக்கே சென்றடையும்.

இத்திட்டத்தில் ஏராளமான விவசாயிகள் உறுப்பினராக சேர்ந்து வருகின்றனர். ஒவ்வொரு விவசாயியின் குடும்பத்தில் இருந்தும் ஒருவரை நவீன தொழில் நுட்ப சாதனங்களை கையாளும் பயிற்சிக்கு சேர்க்க இலக்கிடப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவிடன் கோவை வேளாண் பல்கலையின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு கல்வி மையம், இத்திட்டத்தை மேலும் கூடுதல் விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின் துவக்க விழா, கோவை வேளாண் பல்கலையில் நேற்று நடந்தது.

**விழாவில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:** விவசாயிகளின் நலனுக்காக வேளாண் பல்கலை சார்பில் இதுவரை 746 பயிர் ரகங்களும் 433 வேளாண் கருவிகளும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் உள்ள 29 வேளாண் கல்வி மையங்கள் வாயிலாக புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. வேளாண் விரிவாக்க அலுவலர்களின் தீவிர முயற்சிக்குப் பின்னும் 30 சதவீத விவசாயிகள் மட்டுமே நவீன தொழில் நுட்ப வசதிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். புதிய தொழில் நுட்பங்களை ஏற்பதில் இந்திய விவசாயிகள் இன்னும் முன்னுக்கு வரவில்லை.  இதனால் உற்பத்தியை பெருக்குவது சார்ந்த புதிய தொழில் நுட்பங்களின் பலன்களை இன்னும் அடைய முடியவில்லை. தொழில் நுட்ப பரிமாற்றத்தில் ஏற்பட்டுள்ள இந்த பின்னடைவுக்கு, விவசாயிகளுக்கு கல்வியறிவு மற்றும் நவீன தொழில் நுட்பம் பற்றிய விழிப்புணர்வு இல்லாததே காரணம்.

புதிதாக துவங்கப்பட்டுள்ள 'இ-வேளாண்மை' திட்டத்தில் இதுவரை 1160 விவசாயிகள் உறுப்பினராக சேர்ந்துள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் பலன் அடைந்து திருப்தி தெரிவித்துள்ளனர். சமீபத்தில் உலக வங்கியின் ஆய்வுக்குழு, இத்திட்டத்தை சிறந்த திட்டம் என பாராட்டு தெரிவித்துள்ளது. இதனால் இத்திட்டத்தை மேலும் அதிக விவசாயிகளுக்கு கொண்டு செல்ல முடிவு செய்துள்ளோம். 2010-2011ல் 158 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை 23 உபவடி நிலப்பகுதிகளில் பகுதிகளில் விரிவுபடுத்தவுள்ளோம். மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் இத்திட்டத்தை கொண்டு செல்லும் திட்ட பரிந்துரை, தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். வருங்காலங்களில் இ-வேளாண்மை திட்டம் அதிக விவசாயிகளை சென்றடையும் என்ற நம்பிக்கை உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கும் விரிவாக்க அலுவலர்களுக்கும் இடையிலான இடைவெளி இனி குறையும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார். பல்கலையின் விரிவாக்க கல்வி இயக்குனர் கலைசெல்வன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் துறைக்கு நிதியுதவி**

சிதம்பரம்: சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் பொருளாதார துறையின் பணிகளை பாராட்டி அமெரிக்க நாட் டின் மிக்சிக்கன் மாநில பல்லைக்கழக மாணவர் கள் 1,150 டாலர் நிதியுதவி வழங்கினர். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழக வேளாண் பொருளாதார துறையின் பணிகளை பாராட்டி அமெரிக்க நாட் டின் மிக்சிக்கன் மாநில பல்லைக்கழக மாணவர்கள் 1,150 அமெரிக்க டாலர்கள் நிதியுதவி செய்ய முன் வந்தனர். இந்த நிதியின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட 600 மீனவ பெண்களுக்கு தொழில் முனைவோர் வேலைவாய்ப்பு திறன் மேம்பாடு பயிற்சித் திட் டம் துவக்கி ஓர் ஆண்டு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளனர். அதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நேற்று பல்கலைக் கழகத்தில் நடந்தது. பொருளாதார துறை தலைவர் சுந்தரவரதராஜன் தலைமை தாங்கினார். வேளாண் கல்லூரி முதல்வர் நாராயணசாமி முன்னிலை வகித்தார். அமெரிக்க நாட்டின் மிக் சிக்கன் மாநில பல்லைக்கழக மாணவர்கள் நிதியை துணைவேந்தர் ராமநாதனிடம் வழங்கினர். இணை பேராசிரியர் ராமநாதன், துணை பேராசிரியர் சீனுவாசன் உள்ளிட் டோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**பால் விலையை உயர்த்தி தரக்கோரி சாலை மறியல்**

ஈரோடு: பால் விலையை உயர்த்தக்கோரி, ஈரோட்டில் பெருந்துறை சாலையில் பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் மாடுகளுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பால் உற்பத்தி செலவு லிட்டருக்கு 28 ரூபாய் வரை செலவாவதால், எருமை மற்றும் பசும்பால் லிட்டருக்கு ஐந்து ரூபாய் வரை உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி, ஈரோடு மேட்டுக்கடை அருகே, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நல சங்கத்தின் மாநில பொருளாளர் ராமசாமி தலைமையில், 50 பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர், பசு மாடுகளுடன் சாலையின் மத்தியில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், ஈரோட்டிலிருந்து கோவை செல்லும் வாகனங்கள், கோவையிலிருந்து ஈரோடு வந்து கொண்டிருந்த வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்ட போது ஒரு எஸ்.ஐ., மட்டுமே இருந்ததால், அவர் கொடுத்த தகவலின்பேரில், ஈரோடு டவுன் டி.எஸ்.பி., சுரேஷ்குமார் காலை 9.45 மணிக்கு போலீஸ் படையுடன் சம்பவ இடத்துக்கு வந்தார். சிறிது நேரம் கோரிக்கையை வலியுறுத்தி கோஷம் போட்டுவிட்டு செல்வதாக பால் உற்பத்தியாளர் கூறினர். மறியலில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு போலீஸார் கூறினர். இதையடுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பால் உற்பத்தியாளர்கள், மறியல் போராட்டத்தை கைவிட்டு, கலைந்து சென்றனர்.

**முதலைப்பட்டியில் தோட்டக்கலை பண்ணை சட்டசபையில் எம்எல்ஏ வலியுறுத்தல்**

குளித்தலை: முதலைப்பட்டி தோட் டக்கலை பண்ணையில் விவசாயிகளுக்கு பயற்சி மையம் அமைக்க வேண்டும் என்று சட்டசபையில் எம்எல்ஏ மாணிக்கம் பேசினார்.
இதுகுறித்து எம்எல்ஏ அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:எம்எல்ஏ மாணிக்கம் சட்டபேரவையில் பேசும் போது, குளித்தலை அருகே முதலைப்பட்டி பஞ்.சில் 1978ம் ஆண்டு முதல் அரசு தோட்டக்கலை பண்ணை இயங்கி வருகிறது. மொத்தம் 80 ஏக்கர் பரப்பளவு கொண்ட பண்ணையில் 10 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பல்வேறு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசு மற்றும் வனத்துறைக்கு அனுப்பப்படுகிறது. மீதியுள்ள நிலம் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது. முதலைப்பட்டி சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் பல்வேறு பூக்களை பயிர் செய்கின்றனர். பூக்கள் சாகுபடி செய்வதற்கு தேவையான விதைகள் மற்றும் விதை செடிகள், விதைக்குச்சி வாங்குவதற்கு ராமேஸ்வரம், மேட்டுப்பாளையம் போன்ற பகுதிக்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே முதலைப்பட்டி தோட்டக்கலை பண்ணையில் விவசாயிகளுக்கு பயற்சி மையம் அமைத்து செடி உற்பத்தி குறித்து செயல்முறை பயிற்சி

அளித்தால் அந்த பகுதி விவசாயிகள் பயன் அடைவர் என்றார்.அதற்கு பதில் அளித்த அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கோரிக்கையை விண்ணப்பமாக எழுதி கொடுத்தால் அதுகுறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கலாம் என்றார்.

**கோரிக்கையை வலியுறுத்தி பால் உற்பத்தியாளர் சாலை மறியல்**

ராசிபுரம்: கோரிக்கையை வலியுறுத்தி, கேன்களில் கொண்டு வந்த பாலை சாலையில் ஊற்றி பால் உற்பத்தியாளர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இதனால், ராசிபுரம்- சேந்தமங்கலம் சாலையில் ஒன்றரை மணி நேரம் போக்குவரத்து பாதித்தது. தமிழகத்தில் எருமை மற்றும் பசும் பாலுக்கு லிட்டருக்கு ஐந்து ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும். லிட்டருக்கு இரண்டு ரூபாய் வறட்சி கால மானியமாக வழங்க வேண்டும். தவிடு, புண்ணாக்கு, பருத்தி கொட்டை ஆகிய தீவனங்கள் கடுமையாக விலை உயர்ந்து உள்ளதால், அந்த தீவனங்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் 50 சதவீத மானிய விலையில் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பால் உற்பத்தியாளர்கள் நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ராசிபுரம் அடுத்த பேளுக்குறிச்சி ஆலமரம் பஸ் ஸ்டாப் அருகே பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், கேன்களில் கொண்டு வந்த பாலை சாலையில் கொட்டி கோரிக்கையை வலியுறுத்தினர். தகவல் அறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சமரச பேச்சு வார்த்தை நடத்தினர். அதை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. பால் உற்பத்தியாளர் நடத்திய மறியலால், ராசிபுரம்- சேந்தமங்கலம் வழித்தடத்தில் ஒன்றரை மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. * பள்ளிபாளையம் அருகே வெப்படை நான்கு ரோட்டில் நாமக்கல் மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில், கறவை மாடுகளுடன் விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். விவசாய சங்க தலைவர் மாரிமுத்து தலைமை வகித்து கோஷம் எழுப்பினார். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், கறவை மாடுகளுடன் போராட்டத்தில் ஈடுபட்ட 19 பேரை கைது செய்து, மாலையில் விடுவித்தனர்.

**அதிர்ச்சி! தென்னை மரங்கள் கருகுவதால் விவசாயிகள்... நஷ்டத்தால் மாற்றுபயிர் சாகுபடி செய்ய முடிவு**

நங்கவள்ளி: ஏழு ஆண்டுக்கு பின் ஏற்பட்ட கடும் வறட்சியால், தென்னை மரங்கள் கருகி வீணாவது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அதனால், வருங்காலத்தில் மாற்றுபயிர் சாகுபடி செய்ய நங்கவள்ளி விவசாயிகள் முடிவு செய்துள்ளதால் தேங்காய் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
சேலம் மாவட்டத்திலேயே நங்கவள்ளி பகுதியில்தான் தென்னந்தோப்புகள் அதிக அளவில் உள்ளன. நங்கவள்ளி, வீரக்கல், ஜலகண்டபுரம், காட்டம்பட்டி, ஆடையூர், சாணார்பட்டி பகுதியில் மட்டும் ஒரு லட்சம் தென்னைமரங்கள் உள்ளது. அதனால், தென்னை சார்ந்த தேங்காய் விற்பனை குடோன்கள், நார் திரித்தல், தென்னங்கீற்று பின்னுதல் ஆகிய தொழில்களும் இந்த பகுதியில் அதிகம் உள்ளன. தென்னை, அதை சார்ந்த தொழிலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளனர். நங்கவள்ளி பகுதியில் இருந்து கர்நாடகா, மஹாராஷ்டிரா, மேற்கு வங்காளம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு நாள்தோறும் குறைந்தபட்சம் ஒரு லட்சம் தேங்காய் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பண்டிகை காலத்தில் கூடுதல் தேங்காய் அனுப்பி வைக்கப்படும். நடப்பாண்டில் ஃபிப்ரவரி மாதம் முதல் கோடை வெயில் தாக்கம் அதிகரித்துள்ளது. அதனால், கிணறு, குளம், ஏரி என தென்னை மரங்களின் நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்டு விட்டது. வறட்சி காரணமாக நங்கவள்ளி பகுதியில் கடந்த சில நாட்களாக தென்னை மரங்கள் தொடர்ந்து கருகி வருகிறது. தென்னை மரங்கள் நட்டு ஐந்தாண்டுக்கு பின்பே பலன் கொடுக்க துவங்கும். அதனால், கடந்த ஐந்தாண்டுக்கு முன்பு நட்ட தென்னை மரங்கள் பலன் கொடுக்கும் சமயத்தில் கருகியதால், ஐந்தாண்டுகளாக லட்ச கணக்கில் பணம் செலவு செய்து மரத்தை பராமரித்த விவசாயிகள் கடும் விரக்திக்கு ஆளாகியுள்ளனர். அதுபோல பத்தாண்டுக்கு மேல் ஆன மரங்களும் கருகி வருவது விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏழு ஆண்டுக்கு முன்பு நோய் மற்றும் வறட்சியால் மரங்கள் கருகியதால் நாங்கள் கடுமையாக பாதித்தோம். அதன் பிறகு மீண்டும் இப்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் தென்னை மரங்கள் கருகி விட்டது. தென்னை மரங்களை சாகுபடி

செய்வதால் நஷ்டமே ஏற்படுகிறது. எனவே, இனி தென்னை சாகுபடி செய்வதற்கு பதிலாக ஒரு ஆண்டில் பலன் தரும் உணவு தானியங்களை பயிர் செய்ய முடிவு செய்துள்ளோம். அந்த பயிர்கள் பாதித்தாலும் எங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படாது என விவசாயிகள் கவலையோடு தெரிவித்தனர். வறட்சி காரணமாக தென்னை மரங்கள் அழிந்து வருவதால், நங்கவள்ளி சுற்று பகுதியில் தென்னை மற்றும் அதனை சார்ந்த தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்கள் பாதிப்பது மட்டுமின்றி, வருங்காலத்தில் தேங்காய் உற்பத்தியும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**நவீன எந்திரங்கள் மூலம் மணல் அள்ள கூடாது : சிங்கிகுளம் விவசாயிகள் கடும் எதிர்ப்பு**

திருநெல்வேலி : நவீன எந்திரங்கள் மூலம் மணல் அள்ளுவதை தடை செய்ய வேண்டும் என்று சிங்கிகுளம் பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர்.நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் மணிமுத்தாறு 2வது ரீச் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் முருகன் மற்றும் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது: சிங்கிகுளம் புதுக்கிராமத்தில் அரசு மணல் குவாரி செயல்பட்டு வருகிறது. இதில் ராட்சத எந்திரங்கள் மூலம் அரசு விதிமுறைகளுக்கு மீறாக மணல் அள்ளப்பட்டு வருகிறது. மணிமுத்தாறு பிரதான கால்வாய் 18ம் எண் மடையில் இருந்து தமிழாக்குறிச்சி குளத்திற்கு செல்கின்ற நீர் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இலந்தைகுளம் பாசனம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உடனடியாக இந்த மணல் குவாரியில் நவீன எந்திரங்கள் மூலம் மணல் அள்ளுவதை தடை செய்ய வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொள்முதல் விலை உயர்வு கோரிபால் உற்பத்தியாளர்கள் போராட்டம்:தி.மலை மாவட்டதில் பாதிப்பில்லை**

திருவண்ணாமலை:கொள்முதல் விலை உயர்வு கோரி பால்உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தொடங்கிய போரட்டத்தால் திருவண்ணாமலை மாவட்டத்தில் பாதிப்பு இல்லை.புண்ணாக்கு மற்றும் தீவனங்கள் விலை உயர்ந்துள்ள நிலையில், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று கோரி பால்உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தி.மலை. அடுத்த வேங்கிக்கால் கிராமத்தில் உள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய அதிகாரிகளிடம் இது குறித்து கேட்ட போது கூறியதாவது:திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் குறைந்த அளவு கொள்முதல் செய்யப்பட்டும் இந்த கோடை காலத்தில் தினமும் 56 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்பட்டு, குளிரூட்டி அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் 245 உள்ளன.இந்த சங்கங்கள் மூலம் அனுப்பப்படும் பால் வழக்கம் போல் நேற்றும் அனுப்பபட்டது. இச்சங்கத்தினர் யாரும் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை' என்று தெரிவித்தார்.

**தி.மலையில் அதிக பட்ச வெயில் பதிவு:மக்களை வாட்டி வதைக்குது வெப்பம்**

திருவண்ணாமலை:அக்னி நட்சத்திரத்தில் உச்சகட்டமாக தி.மலையில் நேற்று 105 டிகிரி வெயில் பதிவாகி உள்ளது.திருவண்ணாமலை நகரம் கிழக்கு தொடர்ச்சி மலை பகுதியில் அமைந்துள்ளது. வெயில் காலத்தில் அதிக வெயிலும், குளிர்காலத்தில் அதிக குளிரும் வாட்டி எடுக்கும். 2009ம் ஆண்டு அக்டோபர் மாதம் பெய்த மழைக்கு பின்பு மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு மழை இல்லை.வழக்கமாக ஏப்ரல் மாதத்தில் தான் வெயில் வாட்டி எடுக்கும். ஆனால் இம்முறை பிப்ரவரி மாதம் முதலே வெயில் தாக்கம் படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. நிலத்தடி தண்ணீர் இறங்கத்தொடங்கியது. ஏரி, குளங்கள் வறண்டன. காப்பு காடுகளில் தண்ணீர் இல்லாமல் மான்கள், காட்டுப்பன்றிகள் தண்ணீர் தேடிவந்து மலைப்பகுதியை ஒட்டிய ஊர்களுக்கு வருவதும், கிணறுகளில் விழுந்து இறந்து போவதும் தொடர்கிறது. அதுமட்டுமல்ல நாய்களிடம் அவை கடிபட்டு இறந்து போகும் சம்பவங்களும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் கடந்த மே 4ம் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கியது. அன்று இரவும் மறுநாள் 5ம் தேதியும் மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக தண்டராம்பட்டு பகுதியான தானிப்பாடி, மோத்தக்கல் பகுதிகளில் கனமழை பெய்து காட்டாறுகளில் வெள்ளப்பெருக்கு எடுத்தது. அதே போன்று செங்கம், போளூர், கலசபாக்கம், பகுதிகளிலும் மழை இருந்தது. மழை தொடரும் என்று மக்கள் எதிர்பார்த்த நிலையில் மழை ஏமாற்றி வருகிறது. முன் எப்போதும் இல்லாத அளவில் கடைகளில் 'ஏசி' மிஷின்கள் வியாபாரம் அதிக அளவில் நடந்துள்ளது. குறிப்பாக நடுத்தர மக்கள் கூட இந்தாண்டு அதிக அளவில் 'ஏசி' மிஷின்களை வாங்கினர்.

இந்நிலையில் வெயில் படிப்படியாக அதிகரித்து, மக்களை வறுத்து எடுத்து வருகிறது. கடந்து ஆண்டு அதிகபட்சமாக 103 டிகிரி வெயில் பதிவான நிலையில் இப்போது, அக்னிநட்சத்திரத்தில் அதிகபட்சமாக 105 டிகிரி வெயில் நேற்று பதிவானது. மாலை 5 மணிக்கு மேல் கருமேகங்கள் திரண்டது. மக்கள் மழை பெய்யும் என்று எதிர்பார்த்த நிலையில் பலத்த காற்று வீசி மேகங்கள் கலைந்தது. மழையை எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

**விவசாய பணிகள் குறைவால் வேலை உறுதி திட்டத்தில் சேர்வோர் அதிகரிப்பு**

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி., பகுதியில் மழையின்றி விவசாய பணிகள் மிக குறைந்தளவே நடப்பதால், தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் ஏராளமானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸ்ரீவி., ஊராட்சி ஒன்றியத்தில் 29 ஊராட்சிகளில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டத்தில் கண்மாய்கள், வரத்து கால்வாய்கள் தூர்வாருதல், செப்பனிடுதல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடந்து வருகிறது.

இத்திட்டத்தில் குடும்பத்திற்கு ஆண்டுக்கு நூறு நாள்கள் வேலை, நாளொன்றுக்கு கூலியாக 100 ரூபாய் வழங்கப்படுகிறது.இத்திட்ட துவக்கத்தில் அரசு நிர்ணயித்த வேலையின் அளவு, கடினமாக இருப்பதாக கூறி பலர் இப்பணிக்கு வர தயங்கினர். இதையடுத்து அரசு, வேலைகளின் அளவுகளில் மாறுதல் செய்தது. இதையடுத்து இத்திட்டத்தில் ஏராளமானோர் ஈடுபட்டு வந்தனர். எனினும் ஸ்ரீவி., பகுதியில் விவசாய பணிக்கு ஏராளமானோர் சென்று வந்தனர். இதனால் பல ஊராட்சிகளில் வேலை உறுதி திட்ட பணிகள் மந்தமாகவே நடந்து வந்தது. கடந்த சில மாதங்களாக ஸ்ரீவி., சுற்று வட்டார பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் கண்மாய்கள் வறண்டன, கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் பாதிக்கப்பட்டது. இதனால் விவசாய கூலி வேலை தொடர்ந்து கிடைக்காததால், கூலி தொழிலாளர்கள், தற்போது வேலை உறுதியளிப்பு திட்டத்தில் அதிகளவில் சேர்ந்து பணிகளை செய்து வருகின்றனர்.

**வெங்காயம் பயிரிட்ட விவசாயிகளுக்கு வேதனை: ஆட்கள் பற்றாக்குறையால் அறுவடை பாதிப்பு**

உடுமலை: ஆட்கள் பற்றாக்குறையால், அரைகுறையாக விளைந்த சின்ன வெங்காயத்தை கூட, அறுவடை செய்ய முடியவில்லை. விளை நிலத்திலேயே வெங்காயம் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கிணற்றுப்பாசனத்துக்கு ஆண்டு முழுவதும் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தையொட்டி, கடந்த மார்ச் மாதம் சின்ன வெங்காயம் அதிகளவில் பயிரிடப்பட்டன. உடுமலை பகுதியில் இந்தாண்டு முன்னதாகவே கோடை சீசன் துவங்கியது. இந்த சீசனில் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் இருந்து மழை இல்லாமல் வெயில் கொளுத்தியது. இதனால், சின்ன வெங்காய பயிர்களில் பல்வேறு நோய் தாக்குதல் ஏற்பட்டது. நுனி கருகல் மற்றும் வெள்ளை பயிர் போன்ற தாக்குதல்களால், போதிய விளைச்சல் கிடைக்காத நிலை இருந்தது. களை எடுக்கும் பணிகளுக்கு போதிய ஆட்கள் கிடைக்காததால், அதிக கூலி கொடுத்து தொழிலாளர்களை வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் அழைத்து வந்தனர். இதனால், சாகுபடி செலவு பல மடங்கு உயர்ந்தது. மழை இல்லாமல் வெயில் கொளுத்தியதால், பல பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் சரிந்து, கிணறுகளில் நீர்மட்டம் அதல பாதாளத்துக்குச் சென்றது. மின்தடையும் விவசாயிகளை கடுமையாக பாதித்தது. மும்முனை மின்சாரம் குறிப்பிட்ட நேரத்துக்கு வினியோகிக்கப்படாததால், பயிர் வளர்ச்சி தருணத்தில் போதிய தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. ஏக்கருக்கு சராசரியாக ஆறு முதல் எட்டு டன் வரை கிடைக்க வேண்டிய விளைச்சல் பாதியாக குறையும் நிலை இருந்தது.

விவசாய சாகுபடியில் அதிக சாகுபடி செலவு பிடிக்கும் பயிராக சின்ன வெங்காயம் மாறியுள்ளது. விதை வெங்காயம் கிலோ 15 ரூபாயில் இருந்து 21 ரூபாய் வரையிலும் விலை அதிகரித்தது. உரம், களை எடுத்தல் உள்ளிட்ட செலவுகளோடு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாயாக சாகுபடி செலவு உயர்ந்துள்ளது. பருவ நிலை மாற்றம், இடுபொருள் விலை உயர்வு, மின்வெட்டு போன்ற பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்த சின்ன வெங்காய சாகுபடியில் தற்போது தொழிலாளர் பற்றாக்குறையால் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, உடுமலை பகுதியில் விவசாய தொழிலாளர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம், கிராமங்களில் தீவிரமடைந்தபின், விவசாயிகளின் நிலை மேலும் மோசமாகியுள்ளது. வெங்காய அறுவடை சீசனின் போது, விவசாயிகள் ஒருங்கிணைந்து அருகில் உள்ள திண்டுக்கல் உட்பட மாவட்டங்களில் இருந்து தொழிலாளர்களை அழைத்து வந்தனர். தற்போது, அப்பகுதிகளிலும் வேலை உறுதியளிப்பு திட்ட பணிகள் தீவிரம் அடைந்துள்ளன. பிற மாவட்ட தொழிலாளர்களும் வராததால், சின்ன வெங்காயத்தை குறிப்பிட்ட நேரத்தில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது**: வீரிய ரக விதைகளை பயன் படுத்துவதால், அதிகபட்சமாக 100 நாட்களுக்குள் சின்ன வெங் காயத்தை அறுவடை செய்து விடுகிறோம். குறிப்பிட்ட நேரத்தில், அறுவடை பணிகளை மேற்கொள்ளாவிட்டால், வெங்காயத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். இதனால், ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும். வெங்காய சாகுபடியில் ஆட்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவதை தடுக்க, அனைத்து பணிகளுக்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், இச்சாகுபடி உடுமலை பகுதியில் முழுவதுமாக காணாமல் போய் விடும், என்றனர்.

**நிலக்கடலை வரத்து குறைவு**

அவிநாசி" சேவூரில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்தில் வரத்தும், விலையும் சற்று குறைந்திருந்தது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 250 மூட்டை வந்திருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 150 மூட்டை குறைவு. வரத்து குறைந் துள்ள நிலையில், நிலக்கடலை விலையிலும் சற்று இறக்கம் காணப்பட்டது. முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.20 குறைவாகவும், இரண்டாம் ரகம் ரூ.110 அதிகமாகவும், பச்சை ரகம் ரூ.20 அதிகமாகவும், இந்த வாரம் ஏலத்தில் எடுக்கப்பட்டது. நேற்றைய ஏலத்தில் காய்ந்த நிலக்கடலை முதல் ரகம்

குவிண்டாலுக்கு ரூ.2,960 முதல் ரூ.3,120 வரையும், இரண்டாம் ரகம் ரூ.2,640 முதல் ரூ.2,850 வரையும், பச்சை ரகம் ரூ.1,670 வரையும் ஏலத்தில் எடுக்கப்பட்டது. கண்காணிப்பாளர் (பொறுப்பு) ககன்ராம் சத்திரபதி கூறுகையில்,"கடந்த வாரத்தை விட, வரத்து குறைந்துள்ளது. விலையில் பெரிய மாற் றம் இல்லை. இருப்பினும், இரண்டாம் ரகம் குவிண்டாலுக்கு ரூ.110 அதிகரித்தது. ரூ.ஏழு லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது," என்றார்.

**மாவுப்பூச்சி தாக்குதல்; விவசாயிகள் அதிர்ச்சி**

உடுமலை: குடிமங்கலம் பகுதி கிராமங்களில் பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் வேகமாக பரவி வருவதால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம், அன்னூர் வட்டாரத்தில் கடந்தாண்டு வேகமாக பரவிய பப்பாளி மாவுப் பூச்சி தாக்குதல், விவசாய சாகுபடி பயிர்களில் கடும் சேதத்தை ஏற்படுத்தியது. பட்டுப்புழுக்களுக்கு உணவாக அளிக்கப் படும் மல்பெரி உட்பட 32 வகையான செடிகளை பப்பாளி மாவு பூச்சி தாக்கியது. உடுமலை யில், குறிச்சிக்கோட்டை கிராமத்தில் இருந்த 20 ஏக்கர் பப்பாளி மரங் களை மாவுப்பூச்சி கபளீகரம் செய்தது. மத்திய பட்டு வாரியம், பட்டு வளர்ச்சி துறை, வேளாண் துறை அதி காரிகள் ஒருங்கிணைந்து தாக்குதல் பரவாமல் இருக்க நடவடிக்கை மேற் கொண்டனர். இருப்பினும், பல பகுதிகளில் வேகமாக பரவியது. உடுமலை நகரில் உள்ள வீட்டு தோட்டங்களையும், ரோட் டோர மரங்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

இந்நிலையில், தற் போது குடிமங்கலம் பகுதியில் மாவுப்பூச்சி தாக்குதல் வேகமாக பரவி வருகிறது. பருவமழை இல்லாமல் வறட்சி நில வும் நிலையில், இந்நோய் தாக்குதல் அதிகரித் துள்ளது. வீடுகளிலுள்ள பப்பாளி, மிளகாய், கொய்யா, எலுமிச்சை, கருவேப்பிலை, செம் பருத்தி உட்பட 64 வகை யான செடிகளை நோய் தாக்கி வருகிறது. கொங் கல் நகரம், பெதப்பம் பட்டி, வல்லக் குண்டா புரம், குடிமங்கலம் உட் பட பல கிராமங்களில் இந்நோய்த் தாக்குதல் காணப் படுகிறது. கொங்கல்நகரம் பகுதி விவசாயிகள் கூறுகை யில், 'தோட்டங்களில் உள்ள வேம்பு மரங் களில் வெள்ளை மாவு பூசியது போல் கிளைகள் மாறியுள்ளன. இலைகள் கருகியதோடு, அனைத்து செடிகளிலும் பரவி வரு கிறது. நோயை கட்டுப் படுத்த, தாக்கிய செடி களை வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,' என்றனர்.

பெதப்பம்பட்டி வட்டார வேளாண் விரி வாக்க மைய அதிகாரிகள் கூறுகையில், 'மாவுப் பூச்சி தாக்குதல் குறித்து கள அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். நோய் தாக்கியுள்ள மரங் கள், விவசாய சாகுபடி பயிர்கள் மற்றும் சேதம் குறித்து கணக்கிட்டு அறிக்கை சமர்ப்பிக்க உத் தரவிடப்பட்டுள்ளது. ஆய்வு பணிகள் விரை வில் முடிக்கப்பட்டு நோய் தாக்குதலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும்,' என்றனர்.

**திறந்த வெளியில் செயல்படும் சங்கராபுரம் மார்க்கெட் கமிட்டி : விவசாயிகள் அவதி**

மே 18,2010,00:00 IST



சங்கராபுரம்: சங்கராபுரம் மார்க்கெட் கமிட்டியில் நெல் மூட்டைகள் திறந்த வெளியில் வைத்து எடைபோடப்படுகிறது. மழைக் காலங்களில் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். சங்கராபுரம் கள்ளக்குறிச்சி நெடுஞ்சாலையில் உள்ள மார்க் கெட் கமிட்டியில் சுற்றுப் புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் விளை பொருட்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள சிமென்ட் களத்தில் திறந்த வெளியில் நெல் மூட்டைகள் எடை போடப்படுகிறது. மழை பெய்தால் நெல் மூட்டைகள் நனைந்து நெல்லின் தரம் குறைந்து குறைவான விலையே விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இந்த மார்க்கெட் கமிட்டியில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு உரிய தொகை வழங்குவதில் காலதாமதம் செய்வதாக விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது. இங்கு விவசாயிகளுக்கு ஓய் வறை, கழிப்பிடவசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை. சங்கராபுரம் மார்க்கெட் கமிட்டியில் விவசாயிகளுக்கு கொள்முதல் பணம் உடனுக்குடன் கிடைக்கவும், எடைபோடும் களத்தில் மேற்கூரை அமைக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வெளிநாட்டு தொழில்நுட்பத்தில் தூர்வாரப்படும் வைகை அணை : ஆயிரம் மில்லியன் கன அடி தேக்க திட்டம்**
மே 18,2010,00:00 IST



மதுரை : வைகை அணையில் 980 மில்லியன் கன அடிக்கு ஆக்கிரமித்துள்ள வண்டல் மண்ணை ரூ.170 கோடியில் தூர் வாரி, கூடுதலாக ஆயிரம் மில்லியன் கன அடிக்கு தண்ணீர் தேக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு, வெளிநாட்டு தொழில் நுட்பத்தில் அணையை தூர் வாரும்.

மதுரை உட்பட ஐந்து மாவட்டங்களின் குடிநீர், பாசன வசதிக்காக 1958ல் வைகை அணை கட்டப்பட்டது. மொத்த கொள்ளளவு 6,898 மில்லியன் கன அடி. அணை நீர், பேரணையிலிருந்து மேலூர் வரை 1.45 லட்சம் பாசன ஏக்கருக்கு பயன்படுகிறது. இதில் 45,000 ஏக்கர் இருபோக சாகுபடி உடையவை. பொன்விழா ஆண்டை கடந்த நிலையில், அணையின் மொத்த கொள்ளளவில், 980 மில்லியன் கன அடிக்கு மணல் ஆக்கிரமித்துள்ளது. இதனால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீரின் அளவு குறைகிறது. இதை தவிர்க்க, ரூ.170 கோடியில் அணையை தூர்வார பொதுப்பணித்துறை திட்ட அறிக்கை தயாரித்தது. இதற்காக பொதுப்பணித்துறை திட்டவடிவமைப்பு தலைமை பொறியாளர் தலைமையில் தொழில்நுட்ப ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஏற்கனவே, இருமுறை ஆய்வு நடத்திய நிலையில், இந்தோனிஷியா, அமெரிக்காவில் அணைகளை தூர்வார பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதற்காக இவ்விரு நாடுகளுக்கும் ஆய்வுக்குழு செல்ல அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ஆறு கி.மீ., வரை தூர் வாரி, அந்த மணலை, விவசாய நிலங்களில் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தினத் தந்தி

***சர்க்கரை இறக்குமதி மீது வரி விதிக்க நிறுவனங்கள் கோரிக்கை***

*பிரபா ஜெகன்னாதன்*
*புதுடல்லி*

*இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை மற்றும் மூலச்சர்க்கரை மீது மீண்டும் வரி விதிக்கப்பட வேண்டும் என உள்நாட்டு சர்க்கரை நிறுவனங்கள் விரும்புகின்றன.*

*வரி ரத்து*

*சென்ற இரண்டு ஆண்டுகளாக சர்க்கரை உற்பத்தி குறைந்ததையடுத்து மத்திய அரசு சர்க்கரை இறக்குமதி மீதான வரியை ரத்து செய்தது. இதன்படி, வரும் 2011–ஆம் ஆண்டு மார்ச் 31–ந் தேதி வரை சர்க்கரையை வரியின்றி இறக்குமதி செய்து கொள்ள முடியும். தற்போது வரை, சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மற்றும் மூலச்சர்க்கரை 42 லட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை, உள்நாட்டில் உற்பத்தியான சர்க்கரையைக் காட்டிலும் விலை குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. இதனால் உள்நாட்டு சர்க்கரை துறை நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இறக்குமதி மீது அதிகபட்ச வரி விதிப்பதன் மூலம் மலிவு விலையில் சர்க்கரை இறக்குமதி செய்யப்படுவது பெருமளவு கட்டுப்படுத்தப்படும். மீண்டும் இறக்குமதி வரி விதிக்கப்படவில்லையென்றால் உள்நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.6,500 கோடி இழப்பு ஏற்படும் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இதனால் விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை வழங்குவதில் ஆலைகள் கடும் சிரமத்தை எதிர்கொள்ளும் என்று கூறப்படுகிறது.*

*சில்லரை விற்பனையில்...*

*சர்க்கரை அளிப்பு அதிகரித்து வரும் நிலையில் சில்லரை விற்பனையில் சர்க்கரை விலை குறைந்துள்ளது. தற்போது புதுடெல்லியில் ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ.33 என்ற அளவில் உள்ளது. மும்பையில் ரூ.27–ஆக உள்ளது. ஜனவரி மாத நிலவரத்துடன் ஒப்பிடும்போது இது 30 சதவீத சரிவாகும். எனினும் கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ.17–ஆக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது விலை தற்போது மிகவும் அதிகமாகவே*

உள்ளது.
சில்லரை விற்பனையில் சர்க்கரை விலை குறைவது நுகர்வோருக்கு சாதகமானது என்றாலும், நிறுவனங்களுக்கு இது இடர்பாடு அளிப்பதாக உள்ளது. சர்க்கரை விலை மேலும் குறைந்தால் கரும்பு விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்க இயலாத நிலை உருவாகும் என ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகளின் நலன்

இது குறித்து உத்தரபிரதேச மாநிலத்தின் முன்னணி சர்க்கரை நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி கூறும்போது, "அதிக அளிப்பு காரணமாக சர்க்கரை விலை ரூ.22 அல்லது ரூ.23 என்ற அளவுக்கு குறையுமானால் கரும்பு விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படும். ஏனென்றால் சர்க்கரை விலையில் 70 சதவீதம் கரும்புக்கு விலையாக கொடுக்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

வரும் சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டில் சர்க்கரை பயன்பாடு 2.30 கோடி டன்னாக உள்ள நிலையில், தேவையை விஞ்சி உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீடும் இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிறுவனங்களின் கோரிக்கைக்கு வலுச் சேர்த்துள்ளது. நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.85 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உர தயாரிப்பு நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் புதிய யூரியா உரக் கொள்கையில் எரிவாயு விலைக்கு முக்கியத்துவம்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

தற்போதைய யூரியா உரக் கொள்கையில் இயற்கை எரிவாயு விலை குறித்த அம்சங்கள் தெளிவில்லாமல் உள்ளன. இந்த குறைபாட்டை போக்கும் வகையில் புதிய கொள்கை இருக்கும் என மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜனா தெரிவித்தார்.

புதிய முதலீட்டு கொள்கை

மத்திய அரசு, கடந்த 2008–ஆம் ஆண்டில் யூரியாவிற்கான புதிய முதலீட்டுக் கொள்கையை உருவாக்கியது. எனினும், உரத் துறையில் எதிர்பார்த்த அளவிற்கு முதலீடுகளை ஈர்க்க இயலவில்லை. உர நிறுவனங்களுக்கு முக்கிய இடுபொருளான எரிவாயு விலை நிர்ணயம் மற்றும் இதன் விலையில் ஏற்பட உள்ள ஏற்றத் தாழ்வுகளை முன்னரே கணிக்க இயலாமை போன்றவையே இதற்கு காரணமாகும்.

யூரியா உரத்திற்கான பழைய கொள்கையில் இந்த அம்சங்கள் குறித்து தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. இந்நிலையில், இயற்கை எரிவாயு விலை குறித்த அனைத்து அம்சங்களுக்கும் முழுமையாக விளக்கம் அளிக்கும் வகையில் புதிய கொள்கை இறுதி

செய்யப்படும். எரிவாயு விலையில் நிலவும் நிச்சயமற்ற தன்மையிலிருந்து உர உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் வகையில் புதிய கொள்கை அமையும் என உர அமைச்சகம் கூறியுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தியாகும் இயற்கை எரிவாயுவை, முன்கூட்டியே நிர்ணயம் செய்துள்ள விலையின் அடிப்படையில் உர தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அல்லது எரிவாயு விலை அதிகரிக்கும்போது, அதனால் ஏற்படும் கூடுதல் சுமையிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளன.

தற்போதைய பிரச்சினை எரிவாயு விலை நிர்ணயம்தான். சரியான விலையில் எரிவாயு கிடைக்கும் நிலை ஏற்பட்டால் இத்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும். நலிவடைந்த உர நிறுவனங்களுக்கும் புத்துயிர் அளிக்க இயலும். உரங்கள் உற்பத்தி அதிகரிக்கும். அதே சமயம் உற்பத்தி செலவு குறைவாக இருக்கும் என அமைச்சர் கூறினார்.

விரிவாக்கத் திட்டம்

ஆறு உர நிறுவனங்கள் விரிவாக்கத் திட்டத்தில் இறங்க தயாராகி உள்ளன. எனினும் எரிவாயு விலை நிர்ணயம் மற்றும் தொடர்ச்சியாக எரிவாயு கிடைப்பது குறித்து கவலை தெரிவித்துள்ளன. விரிவாக்கத்துக்காக முதலீடு செய்வது குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு முன் இந்த இரண்டு அம்சங்கள் குறித்து உத்தரவாதம் கிடைத்தாலே செயலில் இறங்க முடியும் என்றும் இந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இன்று நம் நாட்டில் 28 யூரியா தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் உர உற்பத்தித் திறன், ஒட்டுமொத்த அளவில், ஆண்டுக்கு 2 கோடி டன்னாக உள்ளது. புதிய யூரியா உரக் கொள்கை அறிவிக்கப்பட்டதிலிருந்து உற்பத்தி திறனை ஆண்டுக்கு 15 லட்சம் டன் அதிகரிக்க இத்துறை முடிவு செய்தது.

தற்போதுள்ள யூரியா தொழிற்சாலைகளில் 20 ஆலைகள் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்டுள்ளன. இந்த 20 உற்பத்தி பிரிவுகளுக்கு நாள் ஒன்றுக்கு 4.09 கோடி டன் கன மீட்டர் எரிவாயு தேவைப்படுகிறது. வேறு சில ஆலைகள் நாஃப்தாவை எரிபொருளாகப் பயன்படுத்தி வருகின்றன.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் யூரியாவிற்கான தேவைப்பாடு 2.66 கோடி டன்னாக இருந்தது. இது சென்ற நிதி ஆண்டில் 2.82 கோடி டன்னாக உயர்ந்தது. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் கிருஷ்ணா – கோதாவரி (கே.ஜி.) படுகையில் உற்பத்தி செய்யும் எரிவாயுவிலிருந்து நாள் ஒன்றுக்கு 1.5 கோடி கன மீட்டரை, யூரியா உர ஆலைகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

மத்திய அரசு, சென்ற மாதத்தில், டீ.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் கலப்பு உரங்களுக்கு சத்து சார்ந்த மானிய கொள்கையை அறிவித்தது. இதனால் இந்த உரங்களின் விலை நிர்ணயத்தில் அரசு கட்டுப்பாடு பெரிதும் தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் யூரியா உரத்தைப் பொறுத்தவரை விலையை அரசே தொடர்ந்து நிர்ணயம் செய்து வருகிறது.